தபால்
15 SEP 2021
சென்னை-600 003

PD-A

<u>சுருக்கம்</u>

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – மூன்றாம் பாலினர் மற்றும் மூன்றாம் பாலினர் நல வாரியம் – 'திருநங்கை' மற்றும் 'திருநங்கைகள் நல வாரியம்' என்று பெயர் மாற்றம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை [சந3(1)]த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.52

நாள் 26.08.2021,
பிலவ, ஆவணி 10,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.38, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட [ச.ந.8]த் துறை, நாள் 15.04.2008.
2. அரசாணை (நிலை) எண்.71, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட [ச.ந.8(2)]த் துறை, நாள் 06.11.2015.
3. அரசாணை (நிலை) எண்.07, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட [ச.ந.8(2)]த் துறை, நாள் 03.02.2017.

---

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் உள்ள அரவாணிகளுக்கு முழுமையான சமூக பாதுகாப்பை அளிப்பதற்கு தேவையான திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு அரவாணிகள் நல வாரியம் ஒன்றை அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருநங்கைகள் என்னும் சொல் ஆண்களாக இருந்து பெண்களாக மாறியவர்களையே குறிப்பதாக உள்ளதாலும், மூன்றாம் பாலினம் என்ற சொல்லில் பல்வகைப்பட்ட தன்மையுடன் கூடிய பாலின வேறுபாடுகள் கொண்டவர்கள் உள்ளதாலும் அவர்களையெல்லாம் உள்ளடக்கி மூன்றாம் பாலினராக வகைப்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 'அரவாணிகள் நல வாரியம்' என்ற பெயரை தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம் (Third Gender Welfare Board) என்று பெயர் மாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

4. திருநங்கை, திருநம்பி, ஹிஜ்ரா, அரவாணி, மாற்றுப் பாலினத்தவர் போன்ற பல்வேறு வகையான பெயர்கள் நாடு முழுவதும் மூன்றாம் பாலினருக்காக பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அரவாணிகள் என்ற சொல் வழக்கத்தில் இருந்து வந்த நிலையில் ஒரு ஆணின் பெயரின் முன் 'திருவாளர்' அல்லது 'திரு' என்றும் ஒரு பெண்ணின் பெயரின் முன் 'செல்வி', 'திருமதி' என்று குறிப்பிடுவது போன்று அரவாணிகளுக்கு திருநங்கை என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பெரும்பாலானோர் தங்களை திருநங்கை என்று அழைப்பதையே விரும்புகின்றனர். திருநங்கை என்ற சொல் பயன்படுத்தும்போது அச்சொல்லுக்குள் மூன்றாம் பாலினர், மாற்றுப் பாலினத்தவர், திருநங்கை, திருநம்பி போன்றவர்களை உள்ளடக்கி திருநங்கைகள் என்ற சொல்லை பயன்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

5. மேற்கூறியவற்றை தீவிர பரிசீலனை செய்ததன் அடிப்படையில், அரசு பின்வருமாறு ஆணைகள் வெளியிடுகிறது:-

i) **மூன்றாம் பாலினர்** என்று பயன்படுத்தப்படும் சொல்லுக்கு மூன்றாம் பாலினர், மாற்றுப்பாலினத்தவர், திருநங்கைகள், திருநம்பிகள் உள்ளிட்டோரைக் குறிக்கும் வகையில் **'திருநங்கை' என்று தமிழிலும் 'Transgender' என்று ஆங்கிலத்திலும் பெயர்** மாற்றம் செய்யப்படுகிறது.

ii) **மூன்றாம் பாலினர் நல வாரியம்** என்ற பெயரை பயன்படுத்தப்படும் வாரியத்திற்கு, மூன்றாம் பாலினர், மாற்றுப்பாலினத்தவர், திருநங்கைகள், திருநம்பிகள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில் **'திருநங்கைகள் நல வாரியம்' என்று தமிழிலும் 'Transgender Welfare Board' என்று ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.**

// ஆளுநரின் ஆணைப்படி//

ஷம்பு கல்லோலிகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை -15.
சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை - 10.
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் இயக்குநர், சென்னை - 113.
மாநில கணக்காயர், சென்னை - 18.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை - 9
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள்,
(சமூக நல இயக்குநர் வழியாக)
உறுப்பினர்-செயலர்
திருநங்கைகள் நல வாரியம், சென்னை -15

3....

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்
துறை, அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அனைத்து
பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை –9.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை – 9.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை –3.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம், சென்னை –32
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆர். எல். சுப்பு 26/08/2021
பிரிவு அலுவலர்

26/8/21